## எஹலியகொட பிரதேச சபை
## இரத்தினபுரி மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 18 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து எஹலியகொட பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 95,168 தொகை கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் செயற்பாட்டுச் செலவினம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா 108,438 ஆக இருந்த போதிலும், அது ரூபா 70,688 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக வட்டி வருமானம் ரூபா 37,750 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 171,803 தொகையான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படாமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 158,294 தொகை மீண்டெழும் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் செயற்பாட்டுச் செலவினம் சமனான பெறுமதியினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது மீளச் செலுத்தப்பட்ட கேள்வி பிணை வைப்பு ரூபா 77,630 தொகை கணகீடு செய்யப்படாமையின் காரணமாக பிணை வைப்புக் கணக்கின் மீதி சமனான பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்குரிய உள்ளபடியான நீதிமன்றத்தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் என்பவற்றை இனங்காணாமல் ரூபா 9,000,000 மற்றும் ரூபா

10,000,000 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 06 கணக்கு விடயங்களின் மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 1,281,725 வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) 02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் அதற்குரிய குறிப்புகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 137,764,456 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

**1.3.3 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 204 ஆவது விதி | 19,320 | 2016 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 16 விடயங்கள் மற்றும் பெறுமதி கண்டறியப்படாத 05 விடயங்களின் பற்றாக்குறை என்பன தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | நிதிப்பிரமாணம் 371 (2) (இ) | 1,326,035 | 1995 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 57 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்டிருந்த முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் IV(ஆ) பகுதியின் 5(5) ஆவது உப விதி | - | மீளாய்வாண்டின் போது இனங்காணப்பட்டிருந்த அனுமதியற்ற 35 நிர்மாணங்களை அகற்றுவதற்கோ அல்லது சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்குமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக எவ்வித பதிலும் கிடைத்திருக்காமையால் உரிய நிர்மாணங்களை அகற்றுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2009 மார்ச் 09 ஆந் திகதிய 2009/01 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றறிக்கையின் 1.10 ஆம் பந்தி | 102,035 | எஹலியகொடை பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடையொன்று 2007 ஆம் ஆண்டு முதல் உப வாடகைக்கு வழங்கப்பட்டமையின் காரணமாக உப வாடகையாளரை சட்டரீதியாக்கி நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்காக பிரதம அமைச்சரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் நிறுவனக் கடை வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,589,017 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,823,818 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 8,477,000 | 9,023,814 | 8,573,527 | 13,490,044 | 6,688,000 | 9,038,963 | 7,315,517 | 12,779,273 |
| வாடகை | 6,738,900 | 7,033,416 | 7,216,722 | 685,781 | 4,364,800 | 5,944,926 | 6,484,031 | 879,597 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 881,650 | 1,035,707 | 1,007,807 | 91,000 | 777,000 | 804,452 | 822,444 | 17,550 |
| ஏனைய வருமானம் | 23,638,500 | 22,981,403 | 33,438,251 | 20,002,855 | 16,242,850 | 16,758,442 | 12,731,148 | 17,344,982 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது வீத வரியும் வரியும், வாடகை அனுமதிபத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய வருமானம் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தை விட முறையே 01 சதவீதம், 07 சதவீதம், 14 சதவீதம், மற்றும் 96 சதவீதத்ததால்

அதிகரித்திருந்ததுடன் சேவைகளுக்கான கட்டணம், பிடியாணைக் கட்டணமும் தண்டப் பணமும் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தை விட முறையே 36 சதவீதம், 26 சதவீதம் மற்றும் 02 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

**2.2.3 வீதவரியும் வரியும்**

**(அ) ஆதனவரி**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதன வரி மீதி ரூபா 13,117,151 ஆக இருந்ததுடன் அதில் 05 வருடகாலத்திற்கு மேற்பட்ட காலமாகக் கொண்டு வரப்படுகின்ற 960 அலகுகளிலிருந்து அறவிட வேண்டியதாக ரூபா 6,755,238 காணப்பட்டது. நிலுவைப் பணத்தை அறவிடுதல் தொடர்பாக சபையின் செயற்படுநிலை நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

**(ஆ) ஏக்கர் வரி**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 185,630 ஆக இருந்ததுடன் அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற 121 அலகுகளிலிருந்து அறவிட வேண்டியதாக ரூபா 158,438 கூட்டுமொத்தமாகக் காணப்பட்டது. நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக சபையின் செயற்படுநிலை நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

**2.2.4 வாடகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான எஹலியகொடை ஆட்டிறைச்சிக் கடை மற்றும் கோழியிறைச்சிக் கடை என்பவற்றிலிருந்து 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 352,209 தொகையான கடை வாடகையை அறவிடுவதற்கு சபை தவறியிருந்ததுடன் உரிய பிரகாரம் உடன்படிக்கை செய்யாமையினால் நிலுவை வாடகையை அறவிடுவதற்கு தடையாக இருந்தது.

(ஆ) எஹலிகொடை வராந்த சந்தைக்காக 2012 ஆம் ஆண்டின் போது அறவிட வேண்டிக் காணப்பட்ட ரூபா 252,909 நிலுவை வாடகை தொடர்பாக அவிஸ்ஸாவெல்ல மாவட்ட நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் வாடகையாளர் பணம் செலுத்தாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 180,000 அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது.

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் பிரகாரம் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட வேண்டிய 03 வியாபார நிலையங்கள், சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் புதுப்பிக்காமையின் காரணமாக சபைக்கு ரூபா 13,200 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்துடன் அந்த வியாபாரங்களை நடாத்திச் செல்லும் போது ஏற்படக் கூடிய சுற்றாடல் தாக்கங்கள் தொடர்பாக காலரீதியில் மதிப்பீடும் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.2.6 ஏனைய வருமானம்

---

சபை அதிகாரப்பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 06 அறிவித்தல் பதாதைகளுக்காக அறவிடவேண்டிய ரூபா 76,750 தொகையை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

### 2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 சனவரி முதல் 2017 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 10,223,983 கூட்டுத்தொகையான நீதிமன்றத் தண்டப் பணத்தை அறவிடுவதற்கு 2018 மார்ச் வரையிலும் தவறியிருந்தது.

(ஆ) 2016 யூலை முதல் 2017 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரியதாக அறவிட வேண்டிய முத்திரை வரி வருமானத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு 2018 மார்ச் வரையிலும் தவறியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 செயலாற்றல்

---

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்களின் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவை மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், மக்களின் நலன் விவகாரம், வசதிகள் மற்றும் நலன்புரிகள் போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

---

மீளாய்வாண்டிற்காக சபையினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையினால் பேறுவானவத்த கழிவுப் பொருள் அகற்றும் இடத்திலும் கொஹிலதெனிய பிரதேசத்தில் உக்காத கழிவுகளைச் சேகரித்தல் மற்றும் கூட்டுப்பசளை தயாரிக்கும் நோக்கில் 02 நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. கூட்டுப்பசளை உற்பத்தி 2016 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் நிறுத்தப்பட்டமையாலும், உக்காத மற்றும் உக்கும் கழிவுகளை தனித்தனியாக சேகரித்தல் இடம்பெறாமையின் காரணமாகவும் ரூபா 6,180,880 செலவில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு நிலையங்கள் மற்றும் இரண்டு கூட்டுப்பசளை உற்பத்தி இயந்திரங்கள் என்பன மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் விளைவற்றுக் காணப்பட்டன.

(ii) சபையினால் சேகரிக்கப்படுகின்ற உக்கும் மற்றும் உக்காத கழிவுகள் பேறுவான பிரதேசத்தில் ஒரு ஏக்கர் அளவிலான திறந்த வெளியில் முறையற்ற வகையில் அகற்றப்பட்டமையின் காரணமாக ஆகக் கூடிய சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

(iii) 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,805,340 தொகை செலவில் சபை அங்கத்தவருக்கு கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக வெளிநாட்டு பயிற்சி வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த பயிற்சியின் பின்னர் சபை அதிகாரப்பிரதேசத்தில் கழிவுப்பொருள் முகாமைத்துவத்தில் தரமான அபிவிருத்தி ஒன்று ஏற்படாமையின் காரணமாக ஏற்பட்ட செலவினம் பயனற்றதாக இருந்தது.

(iv) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126(ix) (ஆ) பிரிவின் பிரகாரம் மலம் அகற்றல் மற்றும் கழிவுப் பொருள் அகற்றல் மற்றும் அதற்கான கட்டணம் அறவிடல், உப விதி விடயங்களின் காரணங்களாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கழிவுப் பொருள் அகற்றல் தொடர்பாக உப விதிகளை விதித்து அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிவிக்காமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்ககை நிலை மற்றும் சுகாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

**ஊழியர் கடன்**

அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 56,054 கூட்டுத்தொகையான ஊழியர் கடன் மீதியை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சபை அதிகாரப்பிரதேசத்தில் இடம்பெற்ற 07 காணி ஏல விற்பனைகளில் காணிகளின் விற்பனைப் பெறுமதி தொடர்பாக தற்காலிக மதிப்பீட்டின் அடிப்படையில் 1 சதவீதத்திற்குச் சமமான கூட்டுமொத்தமாக ரூபா 762,920 மாத்திரம் சபைக்கு அறவிடப்பட்டிருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) உப பிரிவுகளின் பிரகாரம் காணி விற்பனையிலிருந்து கிடைத்த தொகையில் 1 சதவீதத்திற்குச் சமமான வரியொன்று சபைக்கு அறவிட வேண்டியிருந்த போதிலும், அப்பெறுமதியை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

திவுறும்பிட்டிய நரியரமுல்லஹேன காணி ஏல விற்பனையின் போது பொதுச் செயற்பாடுகளுக்காக சபைக்கு கையளிக்கப்பட்ட 25 போர்ச் காணிப்பகுதியைச் சுற்றி பாதுகாப்பு வேலி நிர்மாணிக்கப்பட்டு சபைக்குச் சொந்தமான காணி என பெயரிப்படாதிருந்ததுடன் காணியில் காடு வளர்ந்திருந்தது. சபைக்குச் சொந்தமான சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் இலக்கிடப்பட்ட பணிகளில் ஈடுபடுத்தல் தொடர்பாக போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

திவுறும்பிட்டிய நரியாமுல்லஹேன காணி ஏல விற்பனையின் போது பொதுச் செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட வேண்டிய 10 சதவீத காணியின் அளவில் 22.61 பேர்ச் குறைவாக சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. நிர்ணயிக்கப்பட்ட காணி அளவை கையேற்பதற்கோ அல்லது அதன் பெறுமதியை சபைக்கு அறவிடுவதற்கோ 2018 மார்ச் வரையிலும் சபை தவறியிருந்தது.

### 3.5 பெறுகைகள்

### 3.5.1 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

மீளாய்வாண்டில் டிஜிட்டல் நிழற்படப் பிரதி இயந்திரம், 02 மடிக் கணனிகள் மற்றும் 04 மேசைக் கணனிகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.1(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் குறித்த மாதிரிகளுக்கு இணங்கியிருந்ததாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரசு இன்றி தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 535,000 செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

09 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 699,500 தொகையான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் சபை தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் தாபித்து அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | செலவினங்கள் இனங்காணப்படாமை |
| | | (ii) | வருமானங்கள் குறைத்து பதிவு செய்யப்பட்டமை |
| | | (iii) | பேரேட்டுக் கணக்குகள் பட்டோலைகளுடன் இணங்காமை |
| | | (iv) | நிதிக்கூற்றுக்கள் அதற்குரிய குறிப்புக்களுடன் இணங்காமை. |
| (ஆ) | வருமான நிர்வாகம் | | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (இ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | முறையான வகையில் அகற்றப்படாமை |
| (ஈ) | சொத்துப் பயன்பாடு | | விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்பட்டமை |
| (உ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | | நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை |